# பத்திரிக்கை செய்தி

**லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக முன்னாள் உதவி செயற்பொறியாளர் திரு.R.ருக்மாங்கதன், த/பெ ரங்கநாதன், மேடவாக்கம்,தமிழ்நாடு மின்சாரவாரியம் அலுவலகம், சென்னை மற்றும் திரு.S.ஜெய்சங்கர் த/பெ. சிவமூர்த்தி (தனிநபர்) ஆகிய இருவருக்கும் தலா இரண்டான்டு மெய்காவல் சிறை தண்டனை விதித்து, செங்கல்பட்டு மாவட்ட முதன்மை குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்புரை.**

லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக தண்டனை பெற்றுள்ள திரு.R.ருக்மாங்கதன், த/பெ ரங்கநாதன், மேடவாக்கம், தமிழ்நாடு மின்சாரவாரிய அலுவலகத்தில் கடந்த 01.02.2009 முதல் 06.03.2010 வரை பணிபுரிந்துள்ளார் மற்றும் திரு.S.ஜெய்சங்கர் திரு.R.ருக்மாங்கதனுக்கு ஓட்டுநராக பணிபுரிந்துள்ளார். அந்த காலகட்டத்தில் புகார்தாரர் திரு.ஐய்யப்பன் த/பெ. செல்வம் ராஜீவ்காந்தி நகர், ஆவடி, சென்னை-65 என்பவர் பள்ளிக்கரணை தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்ததாரராக மின்கம்பம், மின்கேபிள், டிரான்ஸ்பார்மர்கள் அமைப்பது போன்ற வேலைகளை முடித்து அதற்கான தொகையான ரூ1,35,750/- வெகுநாட்களாக வழங்கப்படாததால் அதை பெற்றுத்தருமாறு திரு.ருக்மாங்கதன், உதவி செய்பொறியாளரை சந்தித்து கேட்டபோது அத்தொகைக்கான பில்களை பரிந்துரை செய்ய ரூ12,000/- லஞ்சமாக கொடுக்கவேண்டும் என்றும், மேலும் அத்தொகையை தனது ஓட்டுநர் திரு.ஜெயசங்கரிடம் கொடுத்துவிடும்படியும் கூறியுள்ளார்

புகார்தாரருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத காரணத்தினால் மேற்படி திரு.ருக்மாங்கதன் மற்றும் திரு.ஜெயசங்கர் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கும்படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சிறப்பு புலனாய்வுக்குழுவில் 06.03.2010 அன்று புகார் கொடுத்தின் அடிப்படையில் குற்ற எண்.4/2010-ல் வழக்கு பதிவு செய்து எதிரிகள் மீது பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பில்களை பரிந்துரை செய்ய ரூ12,000/- லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக முன்னாள் உதவி செயற்பொறியாளர் திரு.ருக்மாங்கதன் மற்றும் திரு.ஜெயசங்கர் அவர்களை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இது தொடர்பாக செங்கல்பட்டு, தலைமை குற்றவியல் நடுவர் / ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் 14.12.2010 அன்று குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு 15.12.2010ம் தேதி வழக்கு கோப்புகள் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, வழக்கு எண்.20/2010 வழங்கப்பட்டு, வழக்கு நடைபெற்று வந்தது. இந்நிலையில், மேற்படி முன்னாள் உதவி செயற்பொறியாளர் திரு.R.ருக்மாங்கதன் மற்றும் திரு.ஜெய்சங்கர் மீது குற்றம் உறுதி செய்யப்பட்டு இன்று 30.04.2024 தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் குற்றம் சாட்டப்பட்ட முதல் எதிரி முன்னாள் உதவி செயற்பொறியாளர் திரு R.ருக்மாங்கதன் அவர்களுக்கு சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act, 1988 கீழ் 2 ஆண்டுகள் மெய்காவல் சிறைதண்டனையும், ரூபாய் 10,000/- அபராதமும், கட்ட தவரும் பட்சத்தில் 1 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் மற்றும் u/s 13(2) r/w 13(1)(d) of Prevention of Corruption Act 1988-ன் படி 2 ஆண்டுகள் மெய்காவல் சிறைதண்டனையும், ரூபாய் 10,000/- அபராதமும், கட்ட தவரும் பட்சத்தில் 1 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் ஏக காலத்தில் அனுபவிக்குமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும் 2ம் எதிரியான திரு.ஜெய்சங்கர் அவர்களுக்கு சட்டப்பிரிவு 12 of Prevention of Corruption Act 1988, படி 2 ஆண்டுகள் மெய்காவல் சிறைதண்டனையும், ரூபாய் 10,000/- அபராதமும், கட்ட தவரும் பட்சத்தில் 1 மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

**PRESS NOTE**

**A FORMER ASSISTANT EXECUTIVE ENGINEER (O&M) OF THE MEDAVAKKAM SUB-DIVISION, TNEB, PALLIKARANAI, CHENNAI, HAS BEEN CONVICTED TWO YEARS OF SIMPLE IMPRISONMENT FOR RECEIVING RS.12,000/- AS A BRIBE.**

The convicted accused Tr.R.Rukmangathan, S/o. Ranganathan, was working as Assistant Executive Engineer from 01.02.2009 to 06.03.2010, and Tr.S.Jaisankar (a private individual) was the driver for Tr.Rukmangathan.

The complainant, Tr.S.Iyyappan, S/o.P.Selvam, an EB Labour Contractor residing at Avadi, worked as a labour contractor in the erection of EB posts, laying of EB cables, and fitting of transformers, etc., in Tamil Nadu Electricity Board, Medavakkam Sub-Division. He approached for his pending Chit Agreement bills of Rs.1,35,750/- in the AEE office and met the accused Tr.R.Rukmangathan. He demanded illegal gratification of Rs.12,000/- from the complainant to forward the bills and directed the complainant to hand over the bribe amount to his driver A-2 Tr.S.Jaishankar.

Following this, the complainant filed a petition with the DVAC on 06.03.2010, and the accused, Tr.R.Rukmangathan, was caught red-handed when he received the bribe amount of Rs.12,000/- through A-2 Tr.S.Jaishankar from the complainant. Both accused were arrested and sent for remand.

"After completion of the investigation, a charge sheet was laid before the Chief Judicial Magistrate cum Special Judge, Chengalpattu, on 14.12.2010, and the trial was completed. Today, 30.04.2024, the Hon'ble Chief Judicial Magistrate pronounced the judgment in this case. Tr.R.Rukmangathan, the then Assistant Executive Engineer, was sentenced to undergo Simple Imprisonment for 2 years and shall pay a fine of Rs. 10,000/- in default to undergo 1 month simple

imprisonment for the offence committed under Section 7 of the Prevention of Corruption Act 1988, and 2 years Simple Imprisonment and a fine amount of Rs. 10,000/- in default to undergo 1 month simple imprisonment for the offence committed under Section 13(2) read with Section 13(1)(d) of the Prevention of Corruption Act 1988, and to run the sentence concurrently. Tr.S. Jaishankar A-2 was sentenced to undergo 2 years simple imprisonment and shall pay a fine of Rs. 10,000/- in default to undergo 1 month simple imprisonment for the offence committed under Section 12 of the Prevention of Corruption Act 1988.